பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 14 வெள்ளிக்கிழமை 28.03.2025 | அதிர்வு 237

## அனுராதபுரம் வன்கொடுமை: பிரதான சந்தேகநபரை அடையாளம் காட்டிய பெண் வைத்தியர்

அனுராதபுரம் போதனா வைத்திய சாலையில் பணிபுரியும் பெண் வைத்தியர் பாலியல் வன்கொடுமைக்கு 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# எமக்கு எதிராகத் தடை விதித்து அநீதி இழைத்துள்ளது பிரிட்டன்

### முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட விசனம்



“உலகிலேயே மனித உரிமைகளை அப்பட்டமாக மீறிய நாடுதான் பிரிட்டன். எமக்கு எதிரான பிரிட்டனின் தடை அநீதியானது.” – என்று இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட தெரிவித்துள்ளார்.

பிரிட்டனால் தனக்கு விதிக்கப்பட்டுள்ள தடை தொடர்பில் ஊடகமொன்றிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 02

# நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் ஏற்கப்படுமா?



### வழக்குகள் மீதான விசாரணையை ஏப்ரல் 1 வரை ஒத்திவைத்தது உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம்

வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பான வழக்குகள் உயர்நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

ஜனநாயகத் தமிழ்க் தேசியக் கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் கட்சி, ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் வெவ்வேறு மாவட்டங்களில் தாக்கல் செய்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகள் உயர் நீதிமன்ற நீதியரசர்களான எஸ். துரைராசா, மஹிந்த சமயவர்தன மற்றும் சம்பத் அபேகோன் ஆகியோர் அடங்கிய ஆயம் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டன. 03

# மோடியின் இலங்கை வருகை தொடர்பில் இந்தியா உத்தியோகபூர்வமாக அறிவிப்பு



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஏப்ரல் 4 ஆம் திகதி இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்கின்றார் என்றும், 6 ஆம் திகதி வரை அவர் இலங்கையில் தங்கியிருப்பார் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விஜயத்தின்போது, இந்தியப் பிரதமர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோருடன் இரு தரப்பு பேச்சுகளில் ஈடுபடவுள்ளார் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கையில் தங்கியிருக்கும் காலப் பகுதியில் அனுராதபுரத்தில் உள்ள ஸ்ரீமகா போதிக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபடுவார் என்றும், இந்திய அரசின் உதவியுடன் நாட்டில் செயற்படுத்தப்படும் பல திட்டங்களைத் தொடங்கி வைப்பார் என்றும் இந்திய 03

# உறவினருக்கு வாக்களிக்குமாறு பெண் கிராம அலுவலர் வற்புறுத்து

## வவுனியா மக்கள் குற்றச்சாட்டு

**(வவுனியா நிருபர்)**

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்ட பகுதியில் கடமையாற்றும் கிராம அலுவலர் ஒருவர் தான் கடமையாற்றும் கிராமத்தில் போட்டியிடும் தனது உறவினருக்கு வாக்களிக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்துவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிராமம் ஒன்றில் கடமையாற்றும் பெண் கிராம அலுவலர் ஒருவர், அவர் கடமையாற்றும் கிராமத்தில் இருந்து வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையில் போட்டியிடும் தனது உறவினருக்கு வாக்களிக்குமாறு கிராம அலுவலரது அலுவலகத்திற்கு வருபவர்களுக்கு அறிவுறுத்துகின்றார் என்று பொதுமககள் குற்றம் சாட்டியுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**எமக்கு எதிராக...**

“பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின்போது இலங்கையில் ஊவ, வெல்லஸ்ஸ புரட்சியை ஒடுக்குவதற்காக மக்கள் கொலை செய்யப்பட்டனர். தமது செயல் தொடர்பில் பிரிட்டன் வெட்கப்பட வேண்டும்.

இந்தத் தடை தொடர்பில் அரசு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. அத்துடன் நின்றுவிடாமல் முன்னோக்கிச் செல்ல வேண்டும். ஏனெனில் போலிக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் எமது நாட்டுக்கு எதிராகக் கூட தடை விதிக்கப்படக்கூடும்.” – என்றார்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மோடியின்...**

வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த விஜயத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரதமரின் இந்த விஜயத்தின்போது இந்திய வெளிவிவகார அமைச்சருடன் அந்நாட்டு தேசிய பாதுகாப்பு ஆலோசகர், இந்திய வெளிவிவகார செயலாளர் மற்றும் இந்திய அரசின் பல சிரேஷ்ட அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நிராகரிக்கப்பட்ட...**

இந்த வழக்குகளில் மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் முன்னிலையாகியிருந்தார்.

மேற்படி வழக்குகளின் விசாரணையின் போது சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சட்டவாதி, இது சம்பந்தமாக சுமுகமான முடிவுக்கு வர விரும்புவதாக மன்றுரைத்தார்.

சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதியரசர்கள் ஆயம் குறித்த வழக்குகள் மீதானவிசாரணையைஎதிர்வரும்முதலாம் திகதி வரையில் ஒத்திவைத்துள்ளது.

எனினும், அன்றைய தினத்துக்கு முன்னர், சட்டமா அதிபர் திணைக்களம், தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் மனுதாரர்களின் சட்டத்தரணிகள் ஆகிய தரப்பினர்களுக்கு இடையே கலந்துரையாடல் நடத்தப்பட்டு அதன்போது எட்டப்படும் தீர்மானம் தொடர்பில் மன்றுக்கு அறியப்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, சட்டமா அதிபர் திணைக்களத்தில் நாளைமறுதினம் முற்பகல் 10 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது என்று மனுதாரர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புக்கு பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிலைப்பாடு தொடர்பில் சட்டமா அதிபரால் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**பிரதான...**

உள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேகநபரான முன்னாள் இராணுவச் சிப்பாய் அடையாள அணிவகுப்பின் போது சம்பந்தப்பட்ட வைத்தியரால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அனுராதபுரம் போதனா வைத்திய சாலையில் பெண் வைத்தியர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு இன்று அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இன்றைய நீதிமன்ற விசாரணையில் பிரதான சந்தேகநபர் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்டார். பாதிக்கப்பட்ட பெண் வைத்தியரும் இன்று நீதிமன்றத்துக்கு வந்து பிரதான சந்தேகநபரை அடையாளம் காட்டினார்.

பிரதான சந்தேகநபரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## முட்டாள் மேதாவித்தனம்....!

நாட்டில் அமைதியை நிலைநாட்ட முடியாமல் இருப்பதை ஒப்புக் கொண்டுள்ள பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, அதற்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்று - போதைப் பொருள் வலை அமைப்புக்களின் குற்றங்கள்.

மற்றது - ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் தரப்புக்களின் செயற்பாடுகள். இப்படி அவர் குறிப்பிடுவது பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கைகளை ஆகும்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன எனவும், இந்த பிரச்சினைகள் பல்வேறு காரணிகளால் ஏற்படுகின்றன எனவும் அவர் கூறியுள்ளார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில்-அதாவது பாதாளஉலகக்குழுவினரின் நடவடிக்கைகளில் - சில பாதுகாப்புப் படையினரும் சம்பந்தப்பட்டுள்ளனர் என்று கூறியுள்ள அவர், அதனால் பாதுகாப்புப் படை அதிகாரிகளுக்கும் பெரும் பாதிப்பு உள்ளதாகவும் சுட்டிக் காட்டுகிறார்.

அதாவது பாதாள உலகக் குழுக்கள் பாதுகாப்புப் படைகளுக்குள்ளும் ஊடுருவி இருப்பதாக அவர் ஒப்புக் கொள்கின்றார்.

ஏற்கனவே இப்பத்தியில் பல தடவைகள் நாம் சுட்டிக் காட்டியபடி பாதாள உலகக் குழு நடவடிக்கைகள் உருவாகவும், தீவிரமடையவும் உகந்த சூழலும் பின்புலமும் களமும் தமிழர் தேசத்தில்தான் உள்ளன.

பல்லாயிரக்கணக்கில் நிராதரவாளர்களாக - வாழ்வாதாரத்துக்கே வழியற்றவர்களாக - கை விடப்பட்டவர்களாக - முன்னாள் தமிழ்ப் போராளிகள் சமூகத்துக்குள் நிலை கொண்டுள்ளனர். அன்றாட வாழ்வியலுக்கே கஷ்டப்படும் நெருக்கடியில் உள்ள இவர்கள் கனரக ஆயுதங்களைக் கூட இயக்கும் திறமையும் பரிச்சயமும் கொண்டவர்களாக சமூகத்தில் கவனிப்பாரின்றி விடப்பட்டுள்ளனர். அதேசமயம் யுத்த காலத்தில் தமிழர் தேசத்தினால் சேமிக்கப்பட்ட ஆயுதங்கள், வெடி மருந்துகள் இன்னமும் அரச படைகளினால் முழுமையாக மீட்கப்படவில்லை. இந்தப் பின்புலத்தில் தமிழர் தேசத்தில்தான் பாதாள உலகக் குழுக்கள் - ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை இழைக்கக் கூடிய தரப்புகள் - தோற்றம் பெறவும், விருத்தி அடைந்து தீவிரம் பெற்று நிலைகொள்ளவும், உகந்த சூழலும் களநிலையும் அதிகம் உண்டு.

ஆனால் யுத்தம் முடிந்து இந்த 16 ஆண்டு காலத்தில், பாதாள உலகக் குழுக்களோ அல்லது அதற்கு இலங்கை அரசு நாமம் இட்டமை போன்று ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களோ தமிழர் தேசத்தில் அசுமாத்தம் காட்டக் கூட இல்லை.

ஏனெனில் தமிழர் தேசத்தில் தமது இன மக்களின் உரிமைக்காகவும் அவர்களின் பாதுகாப்புக்காகவும் ஆயுதங்களைத் தூக்கிய தமிழ்ப் போராளிகள் அவற்றை தம் கொள்கைக்காக ஏந்தியவர்கள். அவற்றை தவறாக - குற்றச் செயல்களுக்கு - பயன்படுத்தும் எண்ணம் அவர்களிடம் கிஞ்சித்தும் கிடையாது. எதிர் காலத்திலும் அதைச் செய்யும் நோக்கம் அவர்களுக்குக் இல்லை.

அந்தப் போராளிகளை 'பயங்கரவாதிகளாக' சித்தரித்து, அவர்களை அடக்குவதற்காகத் தமது படையினரை 'அரச பயங்கரவாதத்திற்கு' தூண்டி, முழு முனைப்பில் அதனை முன்னெடுத்த தென்னிலங்கை, இப்போது அந்த அரச பயங்கரவாதத்தின் விளைவு நாட்டுக்கு எதிரான பாதாள உலகக் குழுவாக, 'வளர்த்த கடா மார்பில் பாய்வது போல' நாட்டின் மீது பாய்வதை எதிர்கொள்ள வேண்டிய இக்கட்டில் சிக்கி நிற்கின்றது.

வினை விதைத்தவன் வினை அறுத்தாக வேண்டும் என்பது இதனைத்தானோ...?

இவ்வளவும் நடந்த பின்னரும் - தென்னிலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் தரப்புக்களின் செயற்பாடுகள் உச்சம் பெற்ற பின்னரும் - நாட்டின் பெரும் எண்ணிக்கையான படை அணிகளை - படையினரை - தமிழர் தேசத்தில் குவித்து, அதை இராணுவப் பூமியாக்கி, ஆக்கிரமித்து நிற்கும் தனது பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாதிக்க திமிர்த்தனப் போக்கிலிருந்து சிங்களம் விடுபடவில்லை. தன் மத்தியில் புற்று நோய் போல தீவிரம் பெற்றுவரும் பாதாள உலகக் குழுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு தன் படைகளை மும்முரமாக ஏவி விடுவதிலும் பார்க்க, தமிழர் தேசத்தை ஆக்கிரமித்து நிற்பது அதற்கு முதன்மையானதாகப்படுகின்றது.

என்னே முட்டாள் மேதாவித்தனம்....!

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## தமிழ்த் தேசியத்தைச் சிதைப்பவர்களாக மாறுகின்றனர் தமிழ்த்தேசியம் பேசுவோர்

### *பொத்துவில் முன்னாள் உப தவிசாளர் பார்த்தீபன் கவலை!*

**(வி.ரி.சகாதேவராஜா)**

சமகாலத்தில் தமிழ் தேசியம் பற்றி பேசுபவர்களே தமிழ் தேசியத்தை சிதைப்பவர்களாக இருக்கிறார்கள். அம்பாறை தமிழ் மக்களையிட்டு சற்றும் சிந்திக்காதது கவலைக்குரியது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளரும் சுயேச்சை அணியின் தலைமை வேட்பாளரும் தொழிலதிபருமான பெருமாள் பார்த்தீபன் இவ்வாறு தெரிவித்தார் .

காலா காலமாக இலங்கை தமிழரசுக் கட்சியின் பொத்துவில் பிரதேச முக்கிய தூணாக விளங்கிய பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் பெருமாள் பார்த்தீபனுக்கு இந்த முறை உள்ளூராட்சி தேர்தலில் அந்தக் கட்சி சார்பில் போட்டியிட அனுமதி மறுக் கப்பட்டுள்ளது.



அதனையடுத்து அவர் சுயேச்சையில் களம் இறங்கியுள்ளார். அந்த அணிக்கான சின்னம் மாம்பழம் ஆகும்.

சமகால அம்பாறை அரசியல் சூழல் தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று தமிழ்த் தேசியம் அதல பாதாளத்துக்குள் போய்க்கொண்டிருக்கிறது.தலைமைகள் தமக்குள் வேறுபடுகின்றன.அம்பாறை மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இழக்கப்படுகின்ற ஆபத்து இருக்கின்றது. மக்களுக்காக கட்சியே தவிர கட்சிக்காக மக்கள் அல்ல.

எனவே பழையவர்களைத் தவிர்த்து புது இரத்தம் பாய்ச்சப்பட வேண்டும். இன்றேல் மக்கள் பெரும்பான்மை கட்சி உடன் சேர்ந்து போக நேரிடும்.

கடந்த முறை செய்த தவறை இம் முறையும் செய்யக்கூடாது. மக்கள் மனைநிலை வேறு அரசியல்வாதிகளின் மனநிலை வேறாக இருக்கின்றது. எல்லோரும் சேர்ந்துதான் இதற்கு முடிவு கட்ட வேண்டும் .

மக்களே சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.- என்றார்.



## திருக்கோவிலில் தேர்தல் பரப்புரை ஆரம்பம்

**(வி.ரி.சகாதேவராஜா)**

திருக்கோவில் பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிடும் பிரபல சமூக செயற்பாட்டாளரும் தொழிலதிபருமான சுந்தரலிங்கம் சசிகுமார் தலைமையிலான சுயேச்சை குழுவின் தேர்தல் பரப்புரைகள் ஆரம்பமாகியுள்ளது.

தம்பிலுவில் 3 ஆம் வட்டார வேட்பாளர் நா.கிருஜன் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

தலைமை வேட்பாளர் சு.சசிகுமார் மற்றும் பல வேட் பாளர்களும் உரையாற்றினர். இதில் பல பொதுமக்கள் கலந்து கொண்டு எதிர்கால திட்டங்கள் பற்றி கலந்துரையாடினர்.



# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்





# நாட்டில் மக்கள் வாழ முடியாது வருமானம் இல்லாமல் உள்ளனர்

## அம்பாறை மாவட்ட வேட்பாளர்கள் மத்தியில் சஜித் பிரேமதாஸ

நாட்டுக்கு என்ன நேர்ந்துள்ளது என்று வீதியில் இறங்கி மக்களிடம் கேட்டால் பதில் வழங்குவார்கள். மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். மக்கள் விரக்தியடைந்துள்ளனர். பொய் வென்று உண்மை தோற்றுவிட்டது. இன்று மக்கள் வாழ முடியாத நிலையில் வருமானம் இல்லாமல் மூன்று வேளை கூட சரியாக சாப்பிட முடியாத நிலையை அடைந்துள்ளனர். இதனால் பாடசாலை மாணவர்கள் கூட பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட வேட்பாளர்களுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

பால்மாவிலைகளும், பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. இவ்வேளையில் அரசு அழுது புலம்புக்கிக் கொண்டிருக்கிறது. தேங்காய் தட்டுப்பாட்டுக்குக் குரங்குதான் காரணமாம். நாய்களுக்கு சோறு போடுவதே அரிசி தட்டுப்பாட்டுக்கு காரணமாம். இதனால் ஒன்றுமே செய்ய முடியாது என புலம்புகின்றனர்.

தெளிவான மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும், நிறைவேற்று அதிகாரத்தையும் வைத்துக் கொண்டு பணியாற்ற முடியாது, கிராமத்து அதிகாரத்தையும் கோருகின்றனர்.

அரிசி, தேங்காய் விலைகளின் விலைகளும் கிடுகிடுவென அதிகரித்து, மக்களால் வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பொறுப்பற்ற விதமாக கேலி செய்து வருகின்றனர். மீண்டும் மீண்டும் பொய் சொல்லி மக்களை ஏமாற்றி நாடு பாழாகியிருக்கும் வேளையில், போதா குறைக்கு கிராமத்தின் அதிகாரத்தையும் கேட்கின்றனர். நாட்டுக்கு சேவையாற்ற போதுமான அதிகாரத்தை மக்கள் தெளிவாகவே இந்த அரசுக்குப் பெற்றுத் தந்துள்ளனர். அடுத்தவர் மீது பழி போடுவதை விடுத்து செய்து காட்டுங்கள்.

தற்போது மின்சார மாபியா நாட்டையே ஆட்கொண்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நாட்டுக்கும் நுகர்வோருக்கும், சுற்றுச்சூழலுக்கும் நன்மை பயக்கும். என்றாலும், நமது நாட்டில் இருந்து சூரிய சக்தியை ஒழிக்கத் தேவையான அனைத்து திட்டங்களையும் வகுத்து தயார் நிலையில் வைத்துள்ளனர்.



மேற்கூரை சூரிய மின்சக்திக்கான கட்டண விகிதம் குறைக்கப்பட்டு, டீசல் மாபியாவுக்கும், எரிபொருள் மாபியாவுக்கும் இடமளித்துள்ளனர். இந்த மாபியாவுக்கு இடமளிக்க முடியாது. சூரிய ஆற்றல், காற்றாலை மற்றும் நீர் மின்சாரம் இன்னும் அதிகமாக இயக்கப்பட வேண்டும். தேர்தல் காலத்தில் அரசு என்னதான் பேசினாலும், இன்று டீசல் எரிசக்தி மாபியாக்களது அடிமைகளாக மாறியுள்ளது.– என்றார்.







# கட்டாக்காலி மாடுகளை பிடித்த மட்டக்களப்பு மாநகர நிர்வாகம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாநகர சபை பிரிவுக்கு உட்பட்ட திருமலை பிரதான தாண்டவன்வெளி வீதிகளில் இரவு வேளையில் நடமாடித்திரிந்த 05 கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டன என்று மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் என்.தனஞ்ஜெயன் தெரிவித்தார்.

நகர எல்லைக்கு உட்பட்ட வீதிகளில் இரவு மற்றும் பகல் வேளைகளில் நடமாடும் இந்த கால்நடைகளால் அதிகளவான விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன.

இதனையடுத்து மாநகர சபை அதிகாரங்களைக் கொண்டு கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் வீதி போக்குவரத்துக்கு இடையூறாக நின்ற 05 கால்நடைகள் மாநகர சபையினரால் பிடிக்கப்பட்டன.

வீதியில் மாலை நேரம் மற்றும் இரவு நேரங்களில் கட்டாக்காலி மாடுகள் கூட்டம் கூட்டமாக அலைந்து திரிகின்றன. இதனால் வீதிப் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்து வருவதுடன் வீதி விபத்துக்களும் இடம்பெறுகின்றன.

எனவே கால்நடை உரிமையாளர்கள் தமது கால்நடைகளுக்கு உரிய அடையாளத்தை உறுதிப்படுத்தித் தண்டப் பணத்தையும் செலுத்த வேண்டும். இல்லை என்றால் 10 நாளளுக்குள் உரிமை கோரப்படாத கால்நடைகள் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.





# இப்தார் நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும்

(எம்.ஏ.றமீஸ்)

புனித ரமழான் காலத்தில் மக்களின் ஆன்மீக செயற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்கில் அட்டாளைச்சேனை அல்-இபாதா கலாசார மன்றத்தின் மூலம் 14 ஆவது வருடமாக நடைபெறும் ஹதீஸ் மஜ்லிஸ் நிகழ்வைத் தொடர்ந்து ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வும், பரிசளிப்பு வைபவமும் நேற்று முன்தினம் (26) மாலை அட் டாளைச்சேனையில் இடம்பெற்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெவ்வை தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது சர்வமதத் தலைவர்கள், உலமாக்கள், அரசியல் பிரமுகர்கள், துறைசார் அதிகாரிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின்போது கடந்த இருபத்தைந்து தினங்களாக இடம் பெற்று வந்த விஷேட ஹதீஸ் மஜ்லிஸ் வினா விடைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை ஜம்இய்துல் உலமா சபை தலைவர் யூ.எம்.நியாஸ் விஷேட மார்க்க சொற்பொழிவாற்றினர். அக்கரைப்பற்று புதுப் பள்ளிவாசல் பேஷ் இமாம் ஆர்.ஏ.பாரிஸ் றெளழி விஷேட துஆப் பிரார்த்தனையும் நிகழ்த்தப்பட்டது.







# குறைபாடுகளுடன் காணப்படும் உடப்பு பொது நூலகம்

**(உடப்பு க.மகாதேவன்)**

உடப்பு 6 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள பொது நூலகத்தில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன என்று உடப்பு கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஆராச்சிக்கட்டு பிரதேச சபையின் கீழ் இயங்கும் இந்த பொது நூல் நிலையம் ஆரம்ப காலத்தில் பல புத்தகங்கள் மற்றும் தமிழ், சிங்கள, ஆங்கிலம் என்ற பல நாளேடுகளைத் தாங்கி வந்தது யாவரும் அறிந்த விடயமாகும். ஆனால் பல வருடங்களாக பத்திரிகைகள் இங்கு வருவது குறைவாகவே காணப்படுகின்றது. அதாவது அரச பத்திரிகையான 'தினகரன்' மட்டுமே வாசிக்கக் கூடியதாக உள்ளது. ஏனைய பத்திரிகைகள் இங்கு இல்லை.

அத்தோடு இங்கு காணப்படும் கட்டடமானது திருத்தி அமைக்கப்பட வேண்டும். கூரையின் மேற்பகுதியில் துவாரம் காணப்படுகிறது. தளபாட வசதிகளும் போதுமானதாக இல்லை.

மேலும் இந்த நூல் நிலையத்தில் வயரிங் வேலைகள் நிறைவடைந்த போதும் அதற்குரிய மின்சாரம் இன்னும் மின்சார சபையால் வழங்கப்படவில்லை. இதில் ஒரு பெண் ஊழியர் கடமை புரிந்து வருகின்றார்.

மாணவர்கள் மற்றும் பொது மக்களின் நலன் கருதி இந்த நூல் நிலையத்துக்கு உரிய வசதிகளை செய்து தருமாறு மக்கள் வேண்டுகின்றனர்.

# திருகோணமலை மாவட்ட செயலக கணக்காய்வு முகாமைத்துவ கூட்டம்

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

2025 ஆம் ஆண்டுக்கான முதலாம் காலாண்டுக்கான கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டமானது திருகோணமலை மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த கூட்டமானது திருகோணமலை மாவட்ட அரச அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட செயலகம் உட்பட பிரதேச செயலகங்களின் கணக்காய்வு முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.



இதன்போது மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன், சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் தலைமை அதிபதி (கிழக்கு மாகாணம்) எம்.எச்.எம். அரபாத், கணக்காய்வு அத்தியட்சகர் என்.ஜி.என். ரத்னஸ்ரீ, பிரதம உள்ளக கணக்காய்வாளர் பா. கேதீஸ்வரன், பிரதம கணக்காளர் ப.ஜெயபாஸ்கர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே. விஜயதாசன், மாவட்ட பொறியியலாளர் ஏ.கே.எம்.நபீல், முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள பிரதிப் பணிப்பாளர் (நிகழ்நிலை), அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உள்ளக கணக்காய்வாளர் (நிகழ்நிலை) , மாவட்ட கணக்காளர் ஏ.எல்.பிரசாத் விஜேசிங்க, பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக கணக்காளர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட செயலக உள்ளக கணக்காய்வுக் கிளை உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.







# திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட பாடநெறிகளை பூர்த்தி செய்த பயிலுனர்களுக்கான சான்றிதழ்கள்

(பழுவூரான்)

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செங்கலடி ஏறாவூர்பற்று பிரதேச கலாசார மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் 2024 ஆம் ஆண்டில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டப் பாடநெறிகளைப் பூர்த்தி செய்த பயிலுனர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை (26) வந்தாறுமூலை கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி திருமதி ஜகனிதா டெஸ்மன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக ஏறாவூர் பற்று உதவிப் பிரதேச செயலாளர் திருமதி நிருபா பிருந்தன் கலந்து கொண்டார்.





அத்தோடு கலாசார உத்தியோகத்தர் திருமதி அனுஜா மோகனதீபன், இந்து கலாசார உத்தியோகத்தர்களான திருமதி சுபாஷினி முகுந்தன், தேவ அதிரன், இளைஞர் சேவை உத்தியோகத்தர் கிஸ்கந்தமுதலி, ஏறாவூர் நகர் கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி எம்.ஐ.எம்.எம். மஹ்பூழ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கினர்.

இதன்போது மாணவர்கள் தமது கலை ஆற்றுகைகளையும் வெளிப்படுத்தியிருந்தனர். இந்நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.




# பவளவிழா காணும் படைப்பிலக்கியவாதி பேராசிரியர் ஆசி. கந்தராஜா!

## நாளை சிட்னியில் பாராட்டு விழா

- முருகபூபதி.

எமது தமிழ் சமூகத்தில் தமது தொழில்சார் அனுபவங்களை படைப்பிலக்கியத்தில் வரவாக்கியிருப்பவர்கள் மிகவும் குறைவு.


எனினும் தமிழர்கள் வாழும் புலம்பெயர் நாடுகளில், குறிப்பாக ஆஸ்திரேலியாவில் எம்மத்தியில் வாழும் விலங்கு மருத்துவர் நொயல் நடேசன், மற்றும் தாவரவியல் பேராசிரியர் ஆசி. கந்தராஜா ஆகியோர், தாம் சார்ந்திருந்த தொழில் துறையில் தாம் கற்றதையும், பெற்றதையும் புனைவுசாரா பத்தி எழுத்துக்கள் மூலம் இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்.

இவ்வாண்டு தனது பவளவிழாவை கொண்டாடும் பிரபல எழுத்தாளரும், பேராசிரியருமான ஆசி. கந்தராஜாவுக்கு நாளை (29) சனிக்கிழமை ஆஸ்திரேலியா சிட்னியில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவரை வாழ்த்தியவாறே இந்த பதிவை எழுதுகின்றேன்.

எனக்கு அவரை கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் நன்கு தெரியும். அவரது

எழுத்தாற்றலையும் பேச்சாற்றலையும் அறிந்திருந்திருந்தமையால், 1997ஆம் ஆண்டு எனது எழுத்துலக பிரவேச வெள்ளிவிழாக்காலத்தில் மெல்பனில் நடந்த விழாவுக்கு அவரை தலைமை தாங்குவதற்கு அழைத்திருந்தேன்.



அந்த விழா மெல்பன் வை. டபிள்யூ. சி. ஏ. மண்டபத்தில் அவரது தலைமையில் நடந்தபோது, மூத்த எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை, கவிஞர் அம்பி, ஓவியர் கே.ரி. செல்வத்துரை, அண்ணாவியார் இளைய பத்மநாதன் ஆகியோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

அன்று முதல் கந்தராஜா, மெல்பன் கலை, இலக்கிய வட்டாரத்திலும் நன்கு அறிமுகமானவர். சிட்னி இலக்கிய பவர் அமைப்பிலும் இணைந்திருந்தார்.

அண்ணாவியார் இளைபத்மநாதனின் ஒரு பயணத்தின் கதை கூத்திலும் பங்கேற்றிருந்தார். அந்தக் கூத்து மெல்பனில் அரங்காற்றுகை செய்யப்பட்டபோதும் வருகை தந்திருந்தார்.


கந்தராஜா, இலங்கை வடபுலத்தில் கைதடி கிராமத்தில் 1950 ஆம் ஆண்டு, புராண இதிகாசங்களை முறைப்படி கற்றுத் தேர்ந்த தமிழ் ஆசான் (அமரர்).

ஆறுமுகம் சின்னத்தம்பி - முத்துப்பிள்ளை தம்பதியரின் செல்வப்புதல்வனாகப் பிறந்தார்.

தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியின் முன்னாள் மாணவரான ஆசி. கந்தராஜா, கிழக்கு ஜேர்மனி பல்கலைக்கழகம் ஒன்றின் புலமைப்பரிசில் பெற்று அங்கு உயர்கல்வியை தொடர்ந்தவர்.

விவசாயம், தாவரவியல் பூங்கனியியல், உயிரியல் தொழில்நுட்பவியல் துறைகளில் பட்டப்படிப்பு மற்றும் முனைவர் பட்ட ஆய்வுகளை நிறைவு செய்து பின்னாளில் பேராசிரியராக சிட்னி பல்கலைக்கழகங்களில் பணியாற்றியவர். அத்துடன் இலங்கை, உட்பட சில நாடுகளிலும் வருகை தருபேராசிரியராக பணியாற்றி வருபவர். 1970களில் கிழக்கு ஜேர்மனியில் தான் கற்றகாலத்தில் பெற்றுக்கொண்ட அரசியல் அனுபவங்களை பல வருடங்களுக்குப் பிறகு, அகதியின் பேர்ளின் வாசல் என்ற நாவலாக வரவாக்கினார். கந்தராஜாவின் சில சிறுகதைகள் ஆங்கிலத்திலும் *(uhorizon)* சிங்களத்திலும் ( ஹெய்க்கோ ) வெளிவந்துள்ளன.

சிறுகதை, நாவல், புனைவுசாரா இலக்கியம், கட்டுரை, பயண இலக்கியம் , அறிவியல் கதைகள் முதலான துறைகளில் பல நூல்களை பேராசிரியர் ஆசி. கந்தராஜா




வரவாக்கியுள்ளார்.

அவை வருமாறு –

பாவனை பேசலன்றி (சிறுகதைத் தொகுப்பு), தமிழ் முழங்கும் வேளையிலே (நேர்காணல்களின் தொகுப்பு), உயரப்பறக்கும் காகங்கள் ( சிறுகதைத் தொகுப்பு), *uhorizon (* சிறுகதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு), கீதையடி நீயெனக்கு... ( குறுநாவல் தொகுப்பு ), கறுத்தக் கொழும்பான் ( புனைவு சாரா இலக்கியம்), செல்லப்பாக்கியம் மாமியின் முட்டிக் கத்தரிக்காய் (புனைவு சாரா இலக்கியம்), கள்ளக்கணக்கு (சிறுகதைத் தொகுப்பு), ஹெய்க்கோ (சிறுகதைகளின் சிங்கள மொழிபெயர்ப்பு), பணச்சடங்கு (சிறுகதைத் தொகுப்பு), மண் அளக்கும் சொல் ( புனைவு சாரா இலக்கியம் ), அகதியின் பேர்ளின் வாசல் (நாவல் – வரலாற்றுப் புதினம்), சைவமுட்டை (அறிவியல் புனைகதைகள்).

இந்திய சாகித்திய அக்டமி வெளியிட்டிருக்கும் கண்களுக்கு அப்பால் இதயத்துக்கு அருகில் என்ற தொகுப்பிலும் கந்தராஜாவின் ஒரு சிறுகதை இடம் பெற்றுள்ளது.

இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருதுகளை இரண்டு தடவைகள் பெற்றிருக்கும் பேராசிரியர் ஆசி. கந்தராஜா, தமிழ்நாடு திருப்பூர் தமிழ்ச்சங்க இலக்கியவிருது, தமிழியல் விருது, தமிழக அரசின் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் விருது , பேராசிரியர் நந்தி சிவஞானசுந்தரம் ஞாபகார்த்த வெண்மேரி அறக்கட்டளை பன்முக தமிழ் ஆளுமைக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது ஆகியனவற்றையும் பெற்றிருக்கிறார்.

கந்தராஜாவின் படைப்புகள் தொடர்பாக பேராசிரியர்கள் எம். ஏ. நுஃமான், அ. இராமசாமி , எழுத்தாளர்கள் (அமரர்) எஸ். பொன்னுத்துரை, ஜெயமோகன், எஸ். ராமகிருஷ்ணன், பிரபஞ்சன், அ. முத்துலிங்கம், அனோஜன் பாலகிருஷ்ணன், சந்திரவதனா, வ. ந. கிரிதரன் ஆகியோர் விரிவாக தங்கள் வாசிப்பு அனுபவங்களை எழுதியிருக்கின்றனர்.

கந்தராஜா வானொலி ஊடகவியலாளராகவும் இயங்கி வருபவர். சிட்னி தாயகம் வானொலியில் நிலா முற்றம் என்ற நிகழ்ச்சியையும் வாரந்தோறும் தொகுத்து வழங்குகிறார்.

பவளவிழா நாயகர் பேராசிரியர் ஆசி. கந்தராஜா தொடர்ந்தும் தனது படைப்பிலக்கியத்துறையில் சாதனைகளை மேற்கொள்ளவேண்டும் என வாழ்த்துகின்றோம்.



# வவுனியா பல்கலைக்கழகத்தில் வருடாந்த இப்தார் நிகழ்வு!

(சம்மாந்துறை ஷதில்சாத் பர்வீஸ்)

வவுனியா பல்கலைக்கழகத்தின் முஸ்லிம் மஜ்லிசின் தலைமையில் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இப்தார் நிகழ்வு பல்கலைக்கழக வளா கத்தில் இடம்பெற்றது.

சமூக நல்லிணக்கத்தைக் குறிக் கோளாகக் கொண்டு நடைபெற்ற இந்த நிகழ்வில் நோன்பின் முக்கியத்துவத்தை பற்றிய மார்க்க சொற்பொழிவுகள் வழங்கப்பட்டன. பல்கலைக்கழக மாண வர்களால் வழங்கப்பட்ட இந்தச் சொற்பொழிவுகள், நோன்பின் ஆன்மீக மற்றும் சமூக பங்களிப்புகளை வலியுறுத்தின.

இந்தநிகழ்வில்பல்கலைக்கழகத்தின் முஸ்லிம், தமிழ், சிங்கள மாணவர்கள் மட்டுமின்றி, பல்கலைக்கழகத்தின் உபவேந்தர், விரிவுரையாளர்கள் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.



# திருகோணமலை செயலக இப்தார் நிகழ்வு

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் இப்தார் குழுவின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் டபிள்யூ. ஜி.எம். ஹேமந்த குமார தலைமையில் இப்தார் நிகழ்வு திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இன, மத நல்லுணர்வை மேம்படுத்தும் நோக்கிலேயே இஸ்லாமிய மக்களால் கடைப்பிடிக்கும் இப்தார் நிகழ்வை சிறப்பிக்கும் முகமாக இந்த நிகழ்வு கொண்டாடப்பட்டு வருகின்றது.

இதன்போது ஸம்ஸம் கிணறு பற்றிய ஆச்சரியமான தகவல்கள் காணொளி மூலமாக காண்பிக்கப்பட்டது.

நோன்பின் விஞ்ஞான ரீதியான விளக்கம், நோன்பின் மகத்துவம் மற்றும் சிறப்புத்தன்மை பற்றி இதன்போது எடுத்து கூறப்பட்டது. மேலும் பாடல் மற்றும் நாடக நிகழ்வுகளும் மேடையை அலங்கரித்தன. இதன்போது நிகழ்வுகளில் கலந்து கொண்டு தமது திறமையை வெளிப்படுத்தியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். சுதாகரன், மாவட்ட செயலக பதவிநிலை அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







# ஞானச்சுடர் 327 ஆவது மலர் வெளியீடும் உதவி வழங்கலும் சந்நிதியான் ஆச்சிரமத்தில்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், ஞானச்சுடர் 327 ஆவது மலர் வெளியீடும் உதவி வழங்கலும் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

நிகழ்வில் வெளியீட்டுரையை இளைப்பாறிய அதிபர் வ.கணேசமூர்த்தியும்,

மதிப்பீட்டுரையை ஆசிரியர் நி.பாபுதரனும் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பட்டன.

உதவித் திட்டங்களாக, சங்கானை பிரதேச வைத்தியசாலையின் கோரிக்கைக்கு அமைவாக, நரம்பியல் புனருத்தாபன பிரிவுக்கு உரிய பக்கவாத நோயாளிகளுக்கான சிகிச்சை இயன் மருத்துவருக்கு வேதனம் வழங்குவதற்கு 70 ஆயிரம் ரூபா பங்குனி மாத நிதி வழங்கப்பட்டது.

தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியின் கோரிக்கைக்கு அமைவாக, பரிசளிப்பு நிகழ்வுக்காக 40 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையின் கோரிக்கைக்கு அமைவாக, தொல்லியல் ஆய்வுக்காக 25 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.






# அக்கரைப்பற்று நீர் வழங்கல் திட்ட பொறுப்பதிகாரி அலுவலகம் முதலிடம்

(றிஸ்வான் சாலிஹூ)

உலக நீர்த்தினத்தை முன்னிட்டு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் கிழக்கு பிராந்திய அலுவலகம் ஏற்பாடு செய்த மாபெரும் நிகழ்வின் ஒரு அங்கமாக, பிராந்தியங்களுக்கு இடையில் சகல துறைகளிலும் சிறந்த வினைத்திறனை வெளிக்காட்டிய நீர் வழங்கல் திட்ட அலுவலகத்துக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (25) மட்டக்களப்பில் நடைபெற்றது.

அதில், பிராந்திய ரீதியில் சகல துறைகளிலும் சிறந்த வினைத்திறனை வெளிப்படுத்தி முதலாவது இடத்தை பெற்ற அக்கரைப்பற்று நீர் வழங்கல் திட்ட அலுவலகத்துக்கான சான்றிதழை



கிழக்கு மாகாண பிரதிப் பொது முகாமையாளர் எந்திரி. நளீன் தேவரப்பெரும அக்கரைப்பற்று நிலையைப் பொறுப்பதிகாரி எம்.எல். றமீஸிடம் வழங்கினார்.

இந்தச் சான்றிதழ் தொடர்பில் அக்கரைப்பற்று நிலையைப் பொறுப்பதிகாரி கருத்துத் தெரிவிக்கையில்,

சிறந்த செயற்றிறன் கொண்ட அலுவலகமாக முதலிடத்தைப் பெறுவதற்கும், 2025 உலக நீர் தின கொண்டாட்டங்களுடன் இணைந்து சிறந்த செயற்றிறனுக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் நாங்கள் பெருமைப்படுகிறோம்.

இந்த சாதனை எங்கள் ஊழியர்களின் கடின உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் குழுப்பணிக்கு ஒரு சான்றாகும். இது எங்கள் சமூகத்துக்குத் தடையற்ற மற்றும் தரமான நீர் விநியோகத்தை வழங்குவதற்கு உறுதி செய்யும் என்றார்.

# இளைஞர் வளத்தை வலுவானதாக்க சிகரம் நிறுவனம் விசேட நடவடிக்கை!

## நிறைவேற்றுப் பணிப்பாளர் றுஷாங்கன் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

இளைஞர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தும் வழிகாட்டிகளாக நாம் இருக்க வேண்டுமே தவிர அவர்களின் முயற்சிகளுக்கு தடையானவர்களாக இருக்கக்கூடாது என்று சுட்டிக்காட்டிய சிகரம் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றுஷாங்கன், அதற்கான ஒரு வழிமுறையே வேலையற்ற பட்டதாரிகள் பிரச்சினைக்கான தீர்வை காண்பதற்கான முயற்சியும் என்று தெரிவித்துள்ளார்.

யாழ். நகரில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த சிகரம் நிறுவனத்தின் நிறைவேற்றும் பணிப்பாளர் றுஷங்கன், மேலும் கூறுகையில்,

வேலையற்ற பட்டதாரிகள் பிரச்சினைக்கு சிகரம் தரும் தீர்வு தொழில் மையமான கற்கைத் துறைகளாகும்.

வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினை எமது நாட்டில் தொடர்ந்தும் எந்தவிதத் தீர்வும் இல்லாமல் நீடித்து வருகிறது.

குறிப்பாக ஒவ்வொரு வருடமும் பல்கலைக் கழகங்களில் இருந்து பட்டம் பெற்று வெளியேறும் ஆயிரக் கணக்கான மாணவர்களில் கணிசமான தொகையினர் இவ்வாறு தம்மை வேலையற்ற பட்டதாரிகள் என்று அடையாளப்படுத்திக் கொண்டு வீதிகளில் இறங்கிப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் கலைத்துறை பட்டதாரிகள் ஆவர்.

பாடத்தெரிவுகளை மேற்கொள்ளும் போது, அந்தப் பாடச் சேர்மானங்கள் மூலம் கிடைக்கக்கூடிய எதிர்கால வாழ்க்கைத் தொழிலுக்கான வாய்ப்புக்கள் எவை என்பது குறித்தோ, பல்கலைக்கழக நுழைவுக்குத் தேவையான இசட் புள்ளிகளை பெறுவதற்கு இந்தப் பாடச் சேர்மானங்கள் எவ்வாறு துணை புரியும் என்பது பற்றியோ மாணவர்களுக்கு எதுவும் தெரிவதில்லை.

அதுமட்டுமல்லாது பல்கலைக் கழக பட்டக் கல்வி மட்டத்திலும் தொழில் மையமான பாடத் தெரிவுகளுக்கான வழிகாட்டல்கள் வழங்கப் படுவதில்லை.

தாம் பட்டக் கல்வியைத் தொடரும் பாடங்களுக்கு தொழில் சந்தையில் இருக்கும் கேள்வி என்ன? தமது பாடங்களில் தொழில் மையமான இருக்கக் கூடிய வாய்ப்புக்கள் எவை என்பது பற்றியெல்லாம் தெரியாமலே மாணவர்கள் பட்டக்கல்வியையும் பூர்த்திசெய்கிறார்கள்.

இதனாலேயே, பட்டக் கல்வியை நிறைவு செய்த பின்னரும் தொழில் வாய்ப்பு பெற முடியாதவர்களாக இந்த மாணவர்கள் காணப்படுகின்றனர்.

பட்டக் கல்வியை நிறைவு செய்த




வர்களின் நிலையே இதுவாயின், க.பொ.த. உயர்தரத்தில் கலைத்துறைப் பாடங்களைக் கற்று பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்களின் நிலை இதைவிட மோசமானது.

இந்தளவுக்கும், இலங்கையில் அதிகளவு மாணவர்கள் ஏனைய துறைகளுடன் ஒப்பிடும்போது கலைத் துறையிலேயே கல்வி கற்று வருகிறார்கள்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் இது இன்னமும் அதிகமாகும்.

தொழில் வாய்ப்புக்களும், தொழில் கல்விக்கான வாய்ப்புக்களும் மிகக் குறைவாகவுள்ள இந்தப் பகுதிகளிலுள்ள இவ்வாறு கலைத்துறையைத் தெரிவுசெய்து கற்கும் மாணவர்கள் மிகவும் பரிதாபகரமான நிலைமைக்கே ஒவ்வொரு வருடமும் தள்ளப்பட்டு வருகின்றனர்.

அதேநேரம் வடக்கு மாகாணத்தில் 15 வருடங்களுக்கு மேலாக கல்வி-தொழில் வழிகாட்டி சேவையை வழங்கி, கருத்தரங்குகள் மூலமாகவும், சிகரம் இளையோர் மாதாந்த சஞ்சிகை, பிரசுரங்கள், இலங்கையிலேயே முன்முதலாக தமிழ் மொழியில் வெளியிடப்பட்ட கல்வி - தொழில் வழிகாட்டி கையேடு என்பவற்றின் மூலமாக ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு தொழில்மையமான கல்விக்கான வழிகாட்டலை வழங்கி, நூற்றுக் கணக்கானவர்களுக்கு நேரடித் தொழிற்பயிற்சிகளின் மூலம் உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களையும் பெற்றுக்கொடுத்து, ஒரு தனியார் தொழில் முயற்சியாக இந்தச் சேவையை வழங்கியமையைக் கௌரவித்து இலங்கை வர்த்தக கைத்தொழில் மன்றங்களின் சம்மேளத்தால் தொழில் முனைவோருக்கான விருதையும் பெற்ற அனுபவம் கொண்ட சிகரம் நிறுவனம், கலைத்துறை மாணவர்களின் இந்த வேலையில்லாப் பிரச்சினைக்கான புத்திபூர்வமான செயன்முறைத் தீர்வு ஒன்றை முன்வைக்கிறது.

உயர்தரக் கலைத்துறைப் பாடங்களை அடிப்படையாகக் கொண்டு, தொடர்பாடல் ஊடகக் கற்கைகள் துறை, விருந்தோம்பல் மற்றும் வடிமைப்புத் துறை, அழகியல், கலை-இலக்கிய கற்கைகள் துறை, வர்த்தகம் சந்தைப்படுத்தல் கற்கைகள்துறை, சட்ட கற்கைகள் துறை, பொதுச் சேவை , அபிவிருத்தி கற்கைகள் துறை என்று 6 தொழில்மையமான கற்கைகள் துறைகளாக கலைத்துறை பாடங்களை வகைப்படுத்தி, இவற்றில் மாணவர்களுக்கு அதிகம் பொருத்தமான துறையை அவர்களது இயல்பான ஆற்றல், ஆர்வம், இயல்தகைமை என்பவற்றின் அடிப்படையில் தெரிவு செய்வதற்குத் தேவையான வாழ்க்கைத் தொழில் உளவியல் மதிப்பீட்டையும் செய்து, அவரவருக்குப் பொருத்தமான துறைகளில் மாணவர்கள் கல்வியைத் தொடர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதுதவிர, கல்வி கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் தொடர்பாடலுக்கான ஆங்கில பாடநெறியை கட்டாய பாடமாக வழங்குவதுடன், அவர்கள் தெரிவு செய்யும் துறைகளுக்குத் தேவையான தொழில்சார் திறன் விருத்திப் பயிற்சிகளையும் மேலதிகமாக வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம், மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியதுமே தொழில் ஒன்றில் இணைந்து கொள்வதற்கான தகுதியைப் பெற்றுக் கொள்வதுடன், பல்கலைக்கழக அனுமதி கிடைத்தால் பகுதிநேரமாக தொழில் செய்து கொண்டு பல்கலைக்கழகக் கல்வியைத் தொடரவும், கிடைக்காவிட்டால் முழுநேரமாகத் தொழில் செய்து கொண்டு பகுதிநேரமாக வெளிவாரிப் பட்டக் கல்வியைத் தொடர்வதற்கும் மாணவர்களால் இயலுமாக இருக்கும்.

அத்துடன் ஏப்ரல் மாத பிற்பகுதியில் இந்தக் கற்கைநெறிகளையும் நாம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்க விருப்பதால், ஏற்கனவே க.பொ.த. உயர்தரத்துக்குத் தோற்றி பல்கலைக்கழக அனுமதி அல்லது தொழில் வாய்ப்புக்களைப் பெற முடியாதவர்களும், சாதாரணதரத்துக்கு மேல் கல்வியைத் தொடர முடியாதவர்களும் உரிய தயார்ப்படுத்தல் கற்கைநெறிகளைக் கற்றுத்தேறி, இந்தத் தொழில்வாண்மையான கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்து தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறு, பல்கலைக்கழக அல்லது பட்டக்கல்வி நுழைவுக்கு முன்னரோ, அன்றி, அவற்றை நிறைவுசெய்தவுடனேயோ மாணவர்கள் தொழில் திறன்களை விருத்திசெய்து, வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாக தயார்ப்படுத்தப்படுவதால், பட்டக்கல்வியை நிறைவு செய்த பின்னர் வேலையற்ற பட்டதாரிகள் என்று தம்மைத்தாமே தாழ்த்திக் கொண்டு வீதிகளில் நின்று போராடவேண்டிய இழிநிலையும் அவர்களுக்கு ஏற்படாது. அதுமட்டுமல்லாது வழி மாறி செல்லும் நிலையும் தடுக்கப்படுகின்றது.- என்றார்.




# 3,000 சிப்பாய்களை ரஷ்யாவுக்கு அனுப்பியது வடகொரியா!

## தென்கொரியா குற்றச்சாட்டு

வடகொரியா மேலும் மூவாயிரம் சிப்பாய்களை ரஷ்யாவிற்கு அனுப்பியுள்ளதாகத் தென்கொரியா குற்றம் சுமத்தியுள்ளது.

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் மோதலுக்கு ஆதரவளிப்பதற்காகக் அந்த சிப்பாய்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

வடகொரியாவிலிருந்து இதுவரை சுமார் 11 ஆயிரம் சிப்பாய்கள் ரஷ்யாவிற்கு அனுப்பப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவ்வாறு அனுப்பப்பட்ட சிப்பாய்களில் இதுவரை சுமார் 4 ஆயிரம் பேர் போரில் கொல்லப்பட்டனர் என அந்த தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

அத்துடன், பலர் காயமடைந்துள்ளனர் என தென்கொரிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.




# டொனால்ட் ட்ரம்ப்பின் வரி விதிப்பால் ஆசிய வாகன சந்தைகளில் வீழ்ச்சி!

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள்மீது 25 சதவீத வரியை விதித்தமையை தொடர்ந்து ஆசிய வாகன களஞ்சிய சந்தைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது உலகளாவிய ரீதியிலான வர்த்தகப் போரை விரிவுபடுத்தியுள்ளதாக அமெரிக்காவுடனான நட்பு நாடுகள் குறிப்பிட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், கார்கள் மற்றும் இலகுரக பாரவூர்திகள் மீதான புதிய வரிகள் எதிர்வரும் ஏப்ரல் 3 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வாகன தயாரிப்புகளை இறக்குமதி செய்யும் நாடுகளில் மெக்ஸிகோ, ஜப்பான், தென்கொரியா, கனடா, மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகள் பாரிய விநியோகஸ்தர்களாக செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரிக் ரொக் செயலியை விற்பனை செய்தால் சீனா மீதான வரி குறைக்கப்படும்: ட்ரம்ப்

சீன நிறுவனமொன்றுக்கு சொந்தமான ரிக் ரொக் செயலியை விற்பனை செய்வதற்கு இணங்கினால் சீனா மீது விதிக்கப்பட்ட வரிகளை குறைப்பதற்கு எதிர்பார்ப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

ரிக் ரொக் செயலியை விற்பனை செய்வதற்கான ஒப்பந்தம் எட்டப்படவில்லை என்றால் அதன் மீது விதிக்கப்பட்ட தடையை அமுல்படுத்துவதற்கான காலத்தை மேலும் நீடிப்பதற்கு எதிர்பார்ப்பதாக அவர் கூறியுள்ளார்.

பாதுகாப்பு காரணங்களுக்காக ரிக் ரொக் செயலி மீது விதிக்கப்பட்ட தடையை அமுல்படுத்துவதை எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி வரை ஒத்தி வைப்பதற்கு டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் தீர்மானித்திருந்தார்.



# பிரிந்த அ.தி.மு.கவின் அனைத்து சக்திகளும் ஒன்றிணைய வேண்டும்; ஓ.பி.எஸ். விருப்பம்

பிரிந்து கிடக்கும் அ.தி.மு.கவின் அனைத்து சக்திகளும் ஒருங்கிணைய வேண்டும் என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

நெல்லையில் வியாழக்கிழமை அ.தி.மு.க. அமைப்புச் செயலாளர் கருப்பசாமி பாண்டியன் உடலுக்கு அஞ்சலி செலுத்திய ஓ.பன்னீர்செல்வம் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

"அ.தி.மு.க. தொடங்கிய காலத்தில் இருந்தே எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவின் மிகுந்த நம்பிக்கையைப் பெற்று, கட்சிப் பணியாற்றியவர் கருப்பசாமி பாண்டியன். தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று அ.தி.மு.கவை பெரிய இயக்கமாக உருவாக்குவதற்கு உழைத்தவர். அவரது மறைவு தென் மாவட்ட மக்களுக்கு பெரிய இழப்பாகும். 1982 ஆம் ஆண்டு பெரியகுளம் மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலில், அவர் பணியாற்றிய விதம் எங்களுக்கெல்லாம் முன்மாதிரியாக அமைந்தது.

பிரிந்து கிடக்கும் அ.தி.மு.கவின் சக்திகள் அனைத்




தையும் ஒருங்கிணைக்க வேண்டும் என்று நினைத்தவர் கருப்பசாமி பாண்டியன். அ.தி.மு.க. தொண்டர்களின் எண்ணமும் அதுதான். பிரிந்திருக்கும் அ.தி.மு.க. ஒன்றிணைவது அவசியம். அதற்கு எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோரது ஆன்மாவால் வழிபிறக்கட்டும்." என்றார்.



# மீனவர்கள் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வுகாண இருதரப்பு பேச்சு; அன்புமணி வலியுறுத்தல்

தமிழக மீனவர்கள் மேலும் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண இருதரப்பு மீனவர்கள் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

"வங்கக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம், தங்கச்சி மடம், பாம்பன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 11 மீனவர்களை அவர்களின் விசைப்படகுடன் இலங்கைக் கடற்படை கைது செய்திருக்கிறது. தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை முடக்கும் நோக்குடன் இலங்கைப் படையினர் தொடர்ந்து நடத்தி வரும் அத்துமீறல் கடுமையாக கண்டிக்கத்தக்கது ஆகும்.

தமிழக மீனவர்கள் இலங்கைப் படையினரால் கைது செய்யப்படுவது அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. கைது செய்யப்பட்ட மீனவர்களை எந்த நிபந்தனையும் இல்லாமல் விடுதலை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்த இலங்கை அரசு, அண்மைக்காலமாக மீனவர்களுக்கு கோடிக்கணக்கில் அபராதம் விதிப்பதையும், ஆண்டுக்கணக்கில் சிறை தண்டனை விதிப்பதையும் வாடிக்கையாக்கிக் கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 29 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற இந்தியா – இலங்கை ஆகிய இரு நாடுகளின் மீனவர்கள் நலனுக்கான கூட்டுப் பணிக்குழு கூட்டத்தில் மீனவர்கள் கைது செய்யப்படுவது அவர்களின் வாழ்வாதாரம் சம்பந்தப்பட்டது என்பதால் இந்த சிக்கலை மனித நேயத்துடன் அணுக வேண்டும்.

இரு நாட்டு மீனவர் அமைப்புகளின் பேச்சுகளுக்கு விரைவாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனால், அதன்பின் 5 மாதங்களாகிவிட்ட நிலையில் இரு தரப்புப் பேச்சுகள் இன்னும் ஏற்பாடு செய்யப்படவில்லை. மீனவர்கள் கைது செய்யப்பட்டு, தண்டிக்கப்படுவதும் தொடர்கிறது.

இந்தியா – இலங்கை இடையிலான கடல் பரப்பின் அளவைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது இரு தரப்பு மீனவர்களும் எல்லை தாண்டாமல் மீன் பிடிப்பது சாத்தியம் இல்லை என்பதுதான் எதார்த்தம். இதை இலங்கை அரசுக்கு இந்தியா புரிய வைக்க வேண்டும். தமிழக மீனவர்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் இரு தரப்பு மீனவர்களுக்கு இடையே பேச்சு நடத்த மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்." எனத் தெரிவித்துள்ளார்.

கனடா முரசு


வெள்ளிக்கிழமை 28/03/2025

## ட்ரம்பின் வரி விதிப்பால் 41 நகரங்களுக்கு பாதிப்பு

### பட்டியலிட்ட கனடா

கனடாவுடனான வர்த்தகப் போரினால் அமெரிக்காவில் உள்ள குறிப்பிட்ட நகரங்கள் கடுமையாக பாதிக்கப்படவுள் ளன என புதிய பகுப்

02▶



# அமெரிக்காவுடனான பழைய உறவுகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன

### கனேடிய பிரதமர் மார்க் கார்னி தெரிவிப்பு

**புதிய வரி விதிப்பின் ஊடாக அமெரிக்காவிற்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என கனேடிய பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.**

**அதிகபட்ச தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த வரிகள் அமையும் என கனேடிய பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.**

**ஒட்டாவாவில் அமைச்சரவைக் கூட்டத்திற்குப்பிறகு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.**

அமெரிக்காவுடனான கனடாவின் பழைய உறவுகள் அனைத்தும் முடிவடைந்து விட்டது எனவும் மார்க் கார்னி கூறியுள்ளார்.

கனடாவின் பொருளாதாரத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என பல்வேறு தரப்பினரையும் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்த உள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நிச்சயமாக அடுத்த ஒரு நாள் அல்லது இரண்டு நாள்களில் பேச்சுவார்த்தை நடக்க உள்ளது. ஜனாதிபதி ட்ரம்ப் கனடாவின் இறையாண்மையை மதிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.




# கனடா - அமெரிக்கா இடையிலான விமானப் போக்குவரத்து கடும் வீழ்ச்சி

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரி விதிப்பு போருக்கு மத்தியில் கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான விமானப் போக்குவரத்து கடும் வீழ்ச்சியடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

வெளியான புதிய தரவுகளின் அடிப்படையில், இரு நாடுகளுக்கும் இடையிலான விமான முன்பதிவுகள் 70 சதவீதத்திற்கும் மேலாகக் குறைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

விமானப் பகுப்பாய்வு நிறுவனமான OAG இன் தரவுகளின்படி, கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான விமான சேவைகளின் எண்ணிக்கையும் அக்டோபர் 2025 வரை குறைக்கப்பட்டுள்ளது.

உச்ச பயணப் பருவமாகக்

03▶



# கனடா - இந்திய உறவு மேம்பட ட்ரம்ப் மறைமுகமாக உதவினார்

கனடாவின் முந்தைய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவால் பாதிக்கப்பட்ட கனடா இந்திய உறவுகள் மேம்பட, ட்ரம்ப் மறைமுகமாக உதவியுள்ளார்.

கனடாவின் முந்தைய பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ, காலிஸ்தான் பிரிவினைவாதி ஒருவர் கொல்லப்பட்ட விவகாரம் குறித்து தூதரக ரீதியில் நடவடிக்கை எடுக்காமல், வெளிப்படையாக இந்தியா மீது குற்றம் சாட்டியதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்குமிடையிலான உறவு கடுமையாக பாதிக்கப்பட்டது.

இரு நாடுகளும் மற்ற நாட்டு தூதரக அதிகாரிகளை வெளியேற்றின. ஆனால், கனடாவின் பிரதமராக மார்க் கார்னி பொறுப்பேற்றுள்ளதைத் தொடர்ந்து மீண்டும் கனடா இந்திய உறவு மேம்படும் நிலை உருவாகியுள்ளது.

மீண்டும் பரஸ்பரம் தூதரக அதிகாரிகளை அனுப்ப இரு நாடுகளும் திட்டமிட்டுவருகின்றன.

இந்த மாற்றத்துக்கு முக்கிய காரணமே அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தான் எனலாம். அதாவது, கனடா மீது கூடுதல் வரிகள் விதித்துள்ள ட்ரம்ப், இந்தியாவையும் குறிவைத்துள்ளார்.

ட்ரம்பின் வரிவிதிப்பு, பல நாடுகளுக்கிடையே உறவுகளை மேம்படுத்திவருகிறது. இந்தியாவும் கனடாவும் கூட அதற்கு விதிவிலக்கல்ல.

ஒத்த கருத்துக்கள் கொண்ட நாடுகளுடனான வர்த்தக உறவுகளை மேம்படுத்திக்கொள்ள கனடா விரும்புகிறது என்று கூறியுள்ள கனடா பிரதமரான மார்க் கார்னி, இந்தியாவுடனான உறவுகளை மீண்டும் கட்டியெழுப்ப வாய்ப்புகள் உள்ளன என்றும் கூறியுள்ளார்.

ஆக, ட்ரம்பின் வரிவிதிப்பு, கனடா இந்திய உறவுகள் மேம்பட மறைமுகமாக உதவியுள்ளது எனலாம்.





## ட்ரம்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாய்வு ஒன்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கனேடிய வர்த்தக சபை வெளியிட்ட தரவுகளின் அடிப்படையில், அமெரிக்காவில் அதன் வடக்கு அண்டை நாடான கனடாவுடனான ஏற்றுமதியை அதிகம் சார்ந்துள்ள பகுதிகளை பட்டியலிட்டுள்ளது.

மட்டுமின்றி, பெரும்பாலான இந்த நகரங்களே டொனால்டு ட்ரம்ப் மீண்டும் ஆட்சிக்கு வர ஆதரவளித்துள்ளதும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. அதாவது சர்ச்சைக்குரிய வரி விதிப்புகளால் அவர் எடுக்கும் சாத்தியமான அரசியல் ஆபத்தின் அறிகுறி இதுவென்றும் கனேடிய வர்த்தக சபை சுட்டிக்காட்டியுள்ளது.

டெக்சாஸின் சான் அன்டோனியோ மற்றும் மிச்சிகனின் டெட்ராய்ட் உள்ளிட்ட 41 அமெரிக்க பெருநகரப் பகுதிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. வெளிநாட்டில் தயாரிக்கப்படும் கார்களுக்கு வரி விதிப்பதன் ஊடாக அமெரிக்காவில் கார் தயாரிப்புத்துறை செழிக்கும் என்றே ட்ரம்ப் வாதிடுகிறார்.

ஆனால், சான் அன்டோனியோ நகரம் முன்னெடுக்கும் ஏற்றுமதியில் கிட்டத்தட்ட பாதி, விண்வெளி சார்ந்த, வாகனம் மற்றும் எரிசக்தி துறை சார்ந்த அனைத்தும் கனடாவையே சார்ந்துள்ளது.

ஓட்டோமொபைல் துறையால் இயங்கும் டெட்ராய்ட் பகுதியின் ஏற்றுமதியில் சுமார் 40 சதவீதம் கனடாவிற்கு செல்கிறது. கனடாவுடனான வர்த்தகப் போரினால் பாதிக்கப்படும் நகரங்களில் மில்வாக்கி மற்றும் பிட்ஸ்பர்க் ஆகியவை முதல் 10 இடங்களுக்குள் இடம் பெற்றுள்ளன.

கனடாவிற்கான ஏற்றுமதியை அதிகம் நம்பியுள்ள பிற நகரங்களில் கன்சாஸ் நகரம், மிசோரி; லூயிஸ்வில்லி, கென்டக்கி; நாஷ்வில்லி, டென்னசி; கொலம்பஸ், ஓஹியோ; சிகாகோ; மற்றும் கிளீவ்லேண்ட் ஆகியவை அடங்கும்.

இதில் பெரும்பாலான நகரங்கள் கடந்த ஜனாதிபதி தேர்தலில் மொத்தமாக டொனால்டு ட்ரம்புக்கு ஆதரவளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.




# கனடாவில் தாக்குதல் சம்பவம்; இருவரை தேடும் பொலிஸ்

கனடாவில் தாக்குதல் சம்பவமொன்றுடன் தொடர்புடைய இரண்டு பேரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

கடந்த டிசம்பர் மாதம் கென்சிங்டன் மார்க்கெட் பகுதியில் நடந்த வன்முறையில் ஒருவர் படுகாயமடைந்திருந்தார்.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய ஒரு ஆணையும் பெண்ணையும் பொலிஸார் தேடி வருகின்றனர்.

கடந்த 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 1 ஆம் திகதி, அதிகாலை 2 மணியளவில், ஒரு நபர் காலேஜ் ஸ்ட்ரீட் மற்றும் அகஸ்டா அவென்யூ சந்திப்பில் சாலையை கடக்கும்போது, ஒரு வாகனம் அவரை மோதியது.

வாகன சாரதி காயமடைந்த நபருடன் மோதலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர், மேஜர் ஸ்ட்ரீட்டில் வாகனத்தை நிறுத்திய சாரதி மற்றும் அவருடன் இருந்த பெண் பயணி, பாதிக்கப்பட்ட நபரை சந்தித்தனர்.

இதற்கிடையில், ஓட்டுநர் கத்தியை எடுத்துத் தாக்கி, அந்த நபருக்கு தீவிர காயங்களை ஏற்படுத்தினார் என பொலிஸ் தகவல் தெரிவித்துள்ளது.

இதற்குப் பிறகு, இருவரும் மீண்டும் காரில் ஏறி, சம்பவ இடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தாக்குதலில் நபருக்கு கடுமையான, வாழ்நாள் முழுவதும் பாதிக்கும் வகையிலான காயங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை பற்றி தகவல் தெரிந்தவர்கள் பொலிஸார் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.




## கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருதப் படும் ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங் களுக்கு இடையில் மிகப்பெரிய குறைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள் ளன. கடந்த ஆண்டு இதே கால கட்டத்துடன் ஒப்பிடும்போது கனடா விலிருந்து அமெரிக்காவிற்கு பயணிக்கும் முன்பதிவுகள் தற்போது 70 சதவீதத்திற்கும் அதிகமாகக் குறைந்துள்ளன.

மார்ச் 2024 முதல் மார்ச் 2025 வரை கிடைக்கக்கூடிய முன்பதிவுகளை ஒப்பிடுகையில் 71 முதல் 76 சதவீதம் வரையில் முன்பதிவுகள் சரிவடைந்துள்ளதாகவே தெரிய வந்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பயணிகளுக்கான விமான இருக்கைகளின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. ஒக்டோபர் மாத இறுதி வரை இரு நாடுகளுக்கும் இடையில் இயங்கும் விமான சேவை நிறுவ னங்களால் 320,000 இற்கும் மேற்பட்ட இருக்கைகள் நீக்கப்பட்டுள்ளதாகவே தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

மேலும், முன்பதிவுகளில் ஏற்பட்டுள்ள எதிர்பாராத சரிவு, கனேடிய பயணிகள் முன்பதிவு செய்வதைத் தாமதப்படுத்துவதைக் குறிக்கிறது என்றே கூறுகின்றனர். ஒருவேளை வரி விதிப்பு தொடர்பான நிச்சயமற்ற தன்மை காரணமாக இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இதனிடையே, ட்ரம்பின் சமீபத்திய வரி விதிப்புகள் என்பது கனேடிய தொழிலாளர்கள் மீதான நேரடி தாக்குதல் என்றே கனடா பிரதமர் மார்க் கார்னி குறிப்பிட்டுள்ளார்.

கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான பயணத்தில் சரிவு எதிர்பார்க்கப்பட்டாலும், முன்பதிவுகளில் கணிசமான 70 சதவீத சரிவு என்பது விமான நிறுவ னங்களுக்கு கடுமையான சவாலை ஏற்படுத்தக் கூடும்..

வர்த்தக ரீதியான அச்சுறுத்தல் ஒருபக்கம் இருந்தாலும், சில கனேடியர்கள் அமெரிக்காவிற்குள் நுழைவதை விரும்பவில்லை என்றே குறிப்பிட்டுள்ளனர்.